நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக ச்செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ,வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம்,கே.பொன் னுசாமி மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் சுலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க முடிவு

நாமக்கல்லில் முத்தமிழறிஞர் கலைஞருக்கு முழு திருவுருவச்சிலை!

மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி - அமைச்சர் மரு. மா.மதிவேந்தன் பங்கேற்பு

நாமக்கல், மே 29-

நாமக்கல்லில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலைஞர் அவர்களுக்கு முழு திருவுருவச்சிலை வைத்து அதனை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முலம் பிரம்மாண்டமாக திறந்து வைப்பது என மாவட்டக் கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி, வனத்துறை அமைச்சர் மரு. மா.மதிவேந்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் திருச்சி சாலை நளா ஹோட்டலில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார். வனத்துறை அமைச்சர் மரு. மா.மதிவேந்தன், சட்ட மன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கமளித்து பேசினார். அவர் பேசும் போது, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இயக்கத்தையும், தமிழ்நாட்டையும் ஏறத்தாழ ஒரு அரை நூற்றாண்டுக்கு மேலாக வழி நடத்தி தமிழினத்தையும், கழகத்தையும் தலை நிமிர செய்தவர். அவருடைய நினைவை போற்றுகின்ற வகையிலே அவரது நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாட இருக்கிறோம். இவ்விழாவை கொண்டாட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும்.

தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெற்று இருக்கிறது என்று சொன்னால் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்த சீரிய முயற்சி தான். இன்றைய தினம் அனைத்து துறைகளிலும் தமிழ்நாடு தலைநிமிர்ந்து இருக்கிறது. சமூக நீதியை நிலை நாட்டுவதற்கு இந்தியாவிலேயே ஒரு முன்னோடி தலைவர் என்று சொன்னால் தலைவர் கலைஞர் அவர்கள் தான். சமூக நீதியை நிலைநாட்டி சமுதாயத்தில் இருக்கக்கூடிய அனைவரும் கல்வி வேலை வாய்ப்பு பெற்று உரிமையை பெற அனைத்து முயற்சியும் எடுத்து இட ஒதுக்கீட்டை பெற்றுக் கொடுத்தவர். அருந்ததியர் சமுதாயத்திற்கு மூன்று சதவீத இட ஒதுக்கிடை வழங்கியவர் கலைஞர் அவர்கள்.

அவரது நினைவை போற்றும் வகையில் நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும், ஒன்றிய, நகர, பேரூர் களில் ஏழை, எளிய மக்களுக்கும், கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கும் நலத் திட்ட உதவிகள் வழங்கி நூற்றாண்டு கொடிக்கம்பத்தில் கழகக்கொடி பறக்கச் செய்ய வேண்டும். நாமக்கல் தெற்கு நகரத்தில் பரமத்தி சாலையில் உள்ள செலம்பகவுண்டர் பூங்காவிலே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழுவுருவச் சிலை அமைத்து, தமிழ்நாட்டின் முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேதியைப் பெற்று சிலை திறப்பு விழாவை பிரமாண்டமான முறையிலே செய்ய இருக்கிறோம். தமிழ்நாடு முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 2 ஆண்டு கால ஆட்சி சாதனைகளை மக்களுக்கு தெரிவிக்க இளைஞரணி சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற உள்ளது. அதே போல் கழக உறுப்பினர்கள் சேர்க்கையில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நாமக்கல் தெற்கு நகரத்தில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் முழு திருஉருவ சிலையினை நூற்றாண்டு விழா நடைபெறுகின்ற இந்த ஆண்டு கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அழைத்து திறப்பது,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம் ஆகிய 3 சட்ட மன்ற தொகுதி வாரியாக கலைஞர் அவர்களின் புகழை பரப்புகின்ற கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள் தொடர்ந்து ஆண்டு முழுவதும் நடத்தப்படும். மேலும் வருகின்ற ஜீன் 3 ஆம் தேதி அன்று ஊர்கள் தோறும், கிராமங்கள் தோறும் ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவது,

எங்கெங்கும் கலைஞர் என்ற அடிப்படையில் கலைஞர் அவர்களின் முழு உருவச்சிலை , மார்பளவு சிலைகள் மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் சார்பில் அமைப்பதற்கு அரசின் விதிமுறைகளை பின்பற்றி அனுமதி பெற்று சிலை அமைப்பது, இளைஞர் அணி சார்பாக சாதனை விளக்க தெருமுனை கூட்டங்களை ஒன்றிய, நகர, பேரூர்களில் நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

"ஜப்பான் குழந்தைகள் பொழிந்த அளவற்ற அன்பில் நனைந்தேன்!"

ஜப்பான் நாட்டின் ஒசாகா கேசலைப் பார்வையிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

டோக்கியோ, மே 29-

ஜப்பான் நாட்டின் பண்பாட்டு அடையாளமாகத் திகழும் ஒசாகா கேசலை, நேற்று முன்தினம் பார்வையிட்டு அது குறித்து வலைதளங்களில் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "அழகிய புன்னகையோடு ஜப்பான் குழந்தைகள் பொழிந்த அளவற்ற அன்பில் நனைந்தேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

இந்தியாவைப் போன்ற தொன்மையான வரலாற்றைக் கொண்ட ஜப்பான் நாட்டின் பண்பாட்டு அடையாளமாகத் திகழும் Osaka Castle**ஐ நான் பார்க்க வேண்டும் என நேற்றைய முதலீட்டாளர்கள் சந்திப்பின்போது பலரும் சொன்னார்கள். அந்தக் கோட்டையைக் காணக்கூடிய வாய்ப்பு இன்று அமைந்தது.**

அழகிய புன்னகையோடு ஜப்பான் குழந்தைகள் பொழிந்த அளவற்ற அன்பில் நனைந்தவாறே அவர்களின் வரலாற்றை அறிந்தேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிறப்பு மருத்துவ முகாம் -

காப்பீட்டுத் திட்டப் பயனாளிகள் பதிவு செய்யும் முகாம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தொடங்கி வைத்தனர்!

சென்னை, மே.29-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு ஆகியோர் நேற்று முன்தினம் (27.5.2023) சென்னை டுமீங் குப்பத்தில், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் காப்பீட்டுத் திட்ட பயனாளிகள் பதிவு செய்யும் முகாமினைத் தொடங்கி வைத்தனர்.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மருத்துவ முகாம்

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் பல்வேறு மருத்துவ முகாம்கள் தொடர்ச்சியாக நடைபெற்று கொண்டிருக்கிறது. குறிப்பாக வருமுன் காப்போம் முகாம்கள், கலைஞரின் வருமுன் காப்போம் என்ற பெயரில் கடந்த 2 ஆண்டுகளாக மிகச் சிறப்பான வகையில் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 3 என்ற வகையிலும், மாநகராட்சிக்கு 4 இடங்களிலும், சென்னை மாநகராட்சியில் 15 இடங்களுமாக மொத்தம் 1250 இடங்களில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு கடந்த 2 ஆண்டுகளாக அறிவிக்கப்பட்டதை காட்டிலும் கூடுதலாக நடத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில் தமிழ்நாடு முழுவதும் மிகச்சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தவகையில் சென்னையைப் பொறுத்தவரை குடிசைப் பகுதிகளை மையமாக வைத்து முகாம்கள் நடத்துவது என்று முடிவெடுத்து, மரியாதைக்குரிய தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரின் ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டு முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பணியாற்றிவரும் மருத்துவமனைகளை கொண்டு ஒவ்வொரு வாரமும் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே பெரும்பாக்கம், கண்ணகி நகர் போன்ற பல்வேறு இடங்களில் இது போன்ற முகாம்கள் நடைபெற்றுள்ளது.

அந்தவகையில் இன்று நொச்சி நகர், நொச்சி குப்பம், டுமிங் குப்பம் போன்ற பல்வேறு கடற்கரைவாழ் மீனவர் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இந்த முகாம்களை பொறுத்தவரை அரசு மருத்துவமனைகளைச் சேர்ந்த ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனை, கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கஸ்தூரிபாய் காந்தி அரசு பொது மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளோடு பெருநகர சென்னை மாநகரட்சியின் மருத்துவ பிரிவு, தனியார் மருத்துவமனைகளான வெங்கடேஸ்வரா மருத்துவமனை, மாதா மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகள் ஒருங்கிணைக்கப்பட்டு இந்த முகாம்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த முகாம்களை இரத்த அழுத்தம், சிறுநீரகம், எக்கோ, இ.சி.ஜி, முழு இரத்த பரிசோதனை, தொழுநோய் கண்டறிதல், காசநோய் கண்டறிதல், கருப்பை வாய் புற்றுநோய் கண்டறிதல் போன்ற பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட்டு கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாது 40 மேற்பட்ட மருத்துவர்கள் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், பல் மருத்துவம், எலும்பியல் மருத்துவம், மன நல மருத்துவ ஆலோசனைகள் என்று பல்வேறு வகையான மருத்துவ ஆலோசனைகளும் இங்கே வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்த மருத்துவ முகாம்கள் மூலம் 1000க்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளனர். குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள் ஏராளமானோர்கள் இந்த மருத்துவ முகாம்கள் மூலம் பயனடைந்துள்ளனர்.

மருத்துவக் காப்பீடு

தமிழ்நாட்டை பெறுத்தவரை முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மிகச் சிறப்பான வகையில் 1779 மருத்துவமனைகளில் செய்யப்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனைகளை பொறுத்தவரை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக மருத்துவமனைகளில் (811 அரசு மருத்தவமனைகள்) இந்த திட்டம் செய்லபடுத்தப்பட்டு கொண்டிருக்கிறது. தனியார் மருத்தவமனைகளை பொறுத்தவரை 968 மருத்துவமனைகளில் இந்த காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது. 1.40 கோடி குடும்பங்கள் ஆண்டொன்றிக்கு தலா ரூ. 5 இலட்சம் வீதம் பயன்பெற்று வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்ற வகையில் இந்த மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் எறத்தாழ ரூ.22 இலட்சம் அளவிற்கு பயன்பெற்று வருகிறார்கள். இருதய மாற்று அறுவை சிகிச்சை, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, கணையம் மாற்றும் அறுவை சிகிச்சை, தோல் மாற்று அறுவை சிகிச்சை எலும்பு மாற்று அறுவை சிகிச்சை எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை கண் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை என்று பல வகைகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன் பெற்று வருகிறார்கள். புதியதாக இந்த காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்கை செய்யும் வகையில் இந்த முகாம் நடத்தப்பட்டுள்ளது

தேசிய மருத்துவ ஆணையம் பொறுமையாக இருப்பது நல்லது

திருச்சி, ஸ்டான்லி மற்றும் தருமபுரி மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் மிகப் பழமை வாய்ந்த மருத்துவமனைகளாகும். திருச்சி மற்றும் ஸ்டான்லி மருத்துவ கல்லூரியில் பயிலும் மாணவர்கள் மிகச் சிறப்பான பணியினை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். தேசிய மருத்துவ ஆணையம் சிறிய குறைகளான CCTV கேமராக்கள் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இல்லை என்ற குறைகள் சொல்லியிருக்கிறார்கள். இந்த குறைகளையும், பழுதடைந்துள்ள CCTV கேமராக்களையும் விரைவில் சரிசெய்து கொடுத்துவிடுவோம்.

ஆனால் இதற்கு மருத்துவ மனையின் அங்கீகாரம் ரத்து, மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரம் ரத்து போன்ற செய்திகளை பெரிதாக வெளியிடுவது என்பது வருத்தத்திற்குரியது. இந்த சிறிய குறைகளுக்காக அங்கீகராம் ரத்து போன்ற பெரிய வார்த்தைகளை சொல்வது என்பது இந்த மாநிலத்தின் மீது அவர்கள் காட்டுகின்ற பாகுபாட்டை வெட்ட வெளிச்சமாக ஆக்கியிருக்கிறது. நடாளுமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு வருவதாலும், அரசியல் ஆதாயத்திற்காக தமிழ்நாட்டில் உள்ள மருத்துவ கட்டமைப்புகளை குறைசொல்வது போன்ற செயல்களை தவிர்த்துக் கொள்வது நல்லது. மத்திய மாநில அரசின் உறவுகளுக்கு எதிராகவும், மாநில அரசின் உரிமைகளுக்கு எதிராகவும் பேசுவது அவர்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என்பது கடந்த காலங்களில் நடந்த நிகழ்வுகள் உறுதிப்படுத்தியுள்ளது, எனவே சற்று பொறுமையாக இருப்பது நல்லது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மை செயலாளர் செல்வி அபூர்வா, தேசிய நல வாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உத்திரப்பிரதேசத்தில் - 6 ஆண்டுகளில்

186 பேரை சுட்டுக்கொன்ற பா.ஜ.க. அரசு!

எந்த விசாரணையும் இன்றி என்கவுண்டர்!

லக்னோ, மே 29 -

உத்தரப் பிரதேசத்தில் 2017ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது. கோரக்பூர் மடாதிபதியும், இந்துத்துவா சாமியாருமான ஆதித்யநாத் முதல்வரானார். 2022 இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று இரண்டாவது முறையாகவும் ஆதித்ய நாத் முதல்வரானார். 6 ஆண்டுகளாக முதல்வராக இருக்கிறார். இந்நிலையில் தான், ஆதித்ய நாத்தின் இந்த 6 ஆண்டு ஆட்சியில், 186 பேர் எந்த விசாரணையும் இல்லாமல், கண்மூடித்தனமாக என்கவுண்ட்டர் முறையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. சராசரியாக 15 நாட்களுக்கு ஒருவர், உ.பி. காவல்துறையால் சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளார்.

உத்தரப் பிரதேச காவல் துறையிடம் பதிவான அதிகாரப்பூர்வ என்கவுண்ட்டர் புள்ளிவிவரங்களை, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு, புலனாய்வு செய்து வெளியிட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள நன்தன்பூர் பகுதியைச் சேர்ந்த குர்மீட் என்பவர்தான், ஆதித்யநாத் பதவியேற்ற பிறகு என்கவுண்ட்ட ரில் கொலை செய்யப்பட்ட முதல் நபர். இச்சம்பவம் 2017, மார்ச் 31 அன்று நடை பெற்றது. கடைசியாக கடந்த மே 14 அன்று உமேஷ் சந்திரா (27), ரமேஷ் (40) ஆகியோர் என்கவுண்ட்டரில் சுட்டு கொல்லப்பட்டனர்.

இவ்வாறு 2017 மார்ச் மாதம் துவங்கி தற்போது வரை 186 பேர் என்கவுண்ட்டரில் கொல்லப்பட்டு உள்ளனர். 15 நாட்களுக்கு ஒரு முறை ஒருவர் காவல்துறையால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அதுமட்டுல்ல, படுகொலைகள் தவிர, 5 ஆயிரத்து 46 பேர் காலில் சுடப்பட்டு காயமடைந்துள்ளனர். இதனைப் பொறுத்தவரை, சராசரியாக 15 நாட்களுக்கு ஒரு முறை 30க்கும் மேற்பட்ட நபர்கள் காவல் துறையினரால் காலில் சுடப்பட்டுள்ளனர்.

இவ்வாறு உ.பி. காவல்துறையால் சுட்டுக்கொல்லப்ப்பட்ட 186 பேர்களில் 96 குற்றவாளிகள் கொலை குற்றம் செய்தவர்கள், 2 பேர் பாலியல் வன்கொடுமை, கும்பல் பாலியல் வன்கொடுமை மற்றும் போக்சோ குற்றம் செய்தவர்கள் என்று கூறப்படுகிறது.

பொதுவாக தங்களின் என்கவுண்ட்டர் கொலைகளுக்கு முன்கூட்டியே காரணத்தை உருவாக்குவது காவல்துறையினரின் வழக்கம். எனவே, கொலை செய்தார்கள், கொள்ளை அடித்தார்கள், வல்லுறவுக் குற்றத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்வதில் ஆச்சரியம் இல்லை.

ஆனால், இந்த என்கவுண்ட்டர்களையொட்டி, மேற்கொள்ளப்பட வேண்டிய முறையான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை என்பதுதான், உ.பி. காவல் துறை மீது சந்தேகத்தை வரவழைக்கிறது.

ஒருவர் குற்றவாளியே ஆனாலும், அவர் காவல்துறையால் சுட்டுக்கொல்லப்படும் பட்சத்தில் மாஜிஸ்திரேட் விசாரணை நடைபெறும். அனைத்து என்கவுண்ட்டர்களுக்கும் இது பொருந்தும். ஆனால், 186 என்கவுண்ட்டரில் 161 என்கவுண்ட்டர் மரணங்கள் தொடர்பான மாஜிஸ்திரேட் விசாரணை நடைபெற்று முடிந்தும், இந்த விசாரணை களின்போது, எந்த எதிர் கேள்வியும் அல்லது என்கவுண்ட்டர் தொடர்பான எந்த மறுப்பும் பதிவு செய்யப்படவில்லை என்பது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

அதுமட்டுமன்றி, 186 என்கவுண்ட்டர்களில் 156 வழக்குகளை முடித்து வைக்கும் அறிக்கை காவல் துறையினரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. இதில் 141 என்கவுண்ட்டர் வழக்குகளை நீதிமன்றம் முடித்து வைக்க ஒப்புக்கொண்டுள்ளது. 15 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

என்கவுண்ட்டர் படுகொலைகளில், மீரட் பகுதியைச் சேர்ந்த காவல்துறையினர் முதலிடத்தைப் பிடித்துள்ளனர். அவர்கள் 65 பேரை என்கவுண்ட்டர் செய்துள்ளனர். வாரணாசி காவல்துறையினர் 20 மற்றும் ஆக்ரா காவல்துறையினர் 14 என என்கவுண்ட்டர்களை அரங்கேற்றியுள்ளனர்.

'ஆப்ரேஷன் லங்கடா' என்ற காவல்துறை நடவடிக்கையில் 2017 மார்ச் முதல் 2023 ஏப்ரல் வரை 5,046 பேர் காலில் சுடப்பட்டுள்ளனர். இதிலும் மீரட் பகுதிதான் முதல் இடத்தில் உள்ளது. இந்த பகுதியில் 1,752 தேடப்பட்ட குற்றவாளிகள் காவல்துறையினரால் சுடப்பட்டுள்ளனர்.

மீரட் பகுதி காவல்துறையினர் மட்டும் அதிகமான என்கவுண்ட்டர்களை நடத்துகிறார்களே. அது ஏன்? என்ற கேள்விக்கு, "மேற்கு உத்தரப்பிரதேசம் எப்போதுமே குற்றச் சம்பவங்கள் அதிகம் நடக்கும் பகுதியாகும்" என்று உத்தரப்பிரதேச காவல்துறை சிறப்பு டி.ஜி.பி. பிரஷாந்த் குமார் பதிலளித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருமதி தையல்நாயகி முத்துசாமி
மே 29 (2001)

சென்னை, துறைமுகம் பகுதிக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் – சிவகங்கை மாவட்டக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் – பானை உடைப்புப்போராட்டம் – நீதிகேட்டு நெடும் பயணம் போன்ற கழகம் நடத்திய போராட்டங்களில் பங்கேற்றவர்.

பால்கமிஷன் அறிக்கை தொடர்பாக தலைவரை அவரது இல்லத்தில் கைது செய்ய முற்பட்டபோது, காவல்துறை வாகனம் முன்பு படுத்து மறியல் செய்து, தடியடிக்கு ஆளாகி மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டவர்.

இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட நிலையில் காரைக்குடியில் சித.சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஈழத் தமிழர் ஆதரவு ரயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.